முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1081

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.09.2022, புதன்கிழமை

1. அறம்காக்க வந்த ஐயனே
ஆறுமுகன் என் அவதாரனே அரங்கனே
வரம் தந்து உன்னுள் யானிருந்து
வையகத்தை காத்து வருகின்றேன்
2. வருகின்ற இந்த மகா அவதாரத்தில்
வல்லமைகூட உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 29 நாள், 14.09.2022 புதன்கிழமை)
தருகின்றேன் நித்தம் நித்தம் சுப்ரமணியப்பெருமான் யானும்
தக்கபடி சுபகிருது வேங்கை திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கனுக்கு ஆறுமுகன் யான் உரைப்பேன்
தகுதி ஏற்றம் உன் தொண்டர் படைகள் உயர்ந்து வர
வருகவே வருகின்ற காலம் தன்னில்
வல்லமைபட ஞான ஆட்சி மலரக்கூடும்
4. தருகின்றேன் இன்னும் அன்பர்களுக்கு ஆற்றல்கூட
தக்கபடி சூட்சுமமாய் சக்தி தந்து
தந்துமே என் நாமஜெபத்தை உன் சக்தியாக சொல்லும்
தரணியில் தொண்டர்கள் அனைத்து பேருக்கும்
5. ஈதூழில் ஞான சித்தி உறுதியாக்கி
இனிதே ஞானவான்கள் ஆட்சி தனை
இனையில்லா அரங்கன் அவதார நோக்கமாக
இந்த யுகத்தில் நடத்தி ஆறுமுகன் யான் அற்புதம் படைப்பேன்
6. ஆகவே அரங்கனை தொடர்ந்து
அகிலத்தார் தொண்டு செய்து வருதலுற
யுகமாற்றம் சடுதி அரங்கனால் நடக்கும்
உலகமே அரங்கன் தொண்டர்களால் மகிழநேரும்
7. நேர்மைகொண்டு அன்னதான சேவை
நிலவுலகமெங்கும் கிளைகளாக அரங்கன் துவக்கி
பெருமைமிக்க ஞானத்தை புகலுவேன்
பிரம்மசூட்சுமமாக பிரணவ சக்தியாக
8. ஆகவே அரங்கன் அருளமுது வழி ஆற்றலாக வழங்க
அனைவருக்கும் பசிபிணி அகன்றோடி
அகன்றோடி சடுதி இந்த கலியுகத்தில் ஆற்றலாக அரங்கன் ஞானம் பரவி
பரவியே உலக மாற்றம் நடக்கும் பழுதில்லா ஞான ஆட்சி மலரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–